© பதிவெண்: எம். 312
தமிழ்நாடு அரசு
2008

# நீலகிரி மாவட்ட அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

உதகமண்டலம், பிப்ரவரி 1, 2008 [எண் 2
[சர்வஜித், தை 18-திருவள்ளுவர் ஆண்டு 2039]

பொருளடக்கம்

| | பக்க எண் |
|---|---|
| அரசு அறிவிக்கை | 15 |
| வட்டாட்சியர் அறிவிக்கை | 16 |
| வனத் துறை அறிவிக்கை | 17 |
| உள்ளாட்சித் துறை அறிவிக்கை | 19 |

# அரசு அறிவிக்கை

## வேளாண் (AP-II) துறை

### அறிவிக்கை

*அரசாணை (நிலை) எண் : 493* *நாள்: 28—11—2007.*

1966 ஆம் ஆண்டு விதைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1966) 11 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்கீழ், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன உட்பிரிவின் நோக்கங்களுக்காக, பின்வரும் நபர்கள் கொண்ட குழுவினை, மேல் முறையீட்டு ஆணைக் குழுவாக இதனால் குறிப்பிடுகிறார்.

(1) விதை சான்றளிப்பு இயக்குநர், கோயம்பத்தூர். — தலைவர்

(2) திரு எல்ட்டி. பச்சியப்பன்,
த/பெ. ப்பி. தட கவுண்டர்,
லலிகம் அஞ்சல், நல்லம்பள்ளி,
தர்மபுரி மாவட்டம். — உறுப்பினர்

(3) திருமதி கே. சந்திரா,
16—77, சுந்தரம் நகர், மக்கள் மன்றம் அருகில்,
சிங்கம்புனரி,
சிவகங்கை—630 502 — உறுப்பினர்

2. மேற்சொன்ன மேல்முறையீட்டு ஆணைக் குழுவின் பதவிக்காலமானது, இந்த அறிவிக்கை, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுகிற நாளிலிருந்து மூன்றாண்டு காலத்திற்கு இருக்கும்.

சுர்ஜித் கே. சவுத்ரி,
*வேளாண் உற்பத்தி ஆணையாளர்,*
*மற்றும் அரசு செயலாளர்.*

# உள்ளாட்சித் துறை அறிவிக்கை

[ந.க. எண் 3774/2007 (ஏ-6), நாள் : 19—11—2007.]

## அச்ச அருவருக்கத் தக்கதும் மற்றும் உணவு கலப்பட தடுப்புச் சட்டத்தின்கீழ் நடத்தும் தொழில் இனங்களுக்கான உரிமக் கட்டணம் வசூலித்தல்.

குன்னூர் நகராட்சி

[1920 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம், பிரிவு 249, உட்பிரிவு (1)இன்கீழ் அறிவிப்பு]

இத்துடன் இணைப்பில் உள்ள அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தொழில் இனங்களுக்கு உரிமக் கட்டண விகிதங்கள் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம், பிரிவுகள் 245, 250, 256, 258, 269 மற்றும் 285இன்படி பிரிசுரிக்கப்பட்டுள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டண விகிதங்கள் மீது ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகள் ஏதேனும் இருந்தால் எழுத்து மூலமாக இவ்வறிப்பு வெளியான நாள் முதல் 30 நாட்களுக்குள் சமர்ப்பிக்கும் பொருட்டு அறிவிப்பு செய்யப்படுகிறது. இதன்படி குன்னூர் நகராட்சி எல்லைக்குள் இணைப்பில் கண்ட ஒன்று அல்லது பல தொழில்களுக்கான செயல் அலுவலரிடம் இருந்து (ஆணையர், குன்னூர் நகராட்சி) உரிமம் பெறாமல் தொழில் நடத்தக்கூடாது.

2. செயல் அலுவலருக்கு (ஆணையர்) உரிமம் வழங்கவோ அல்லது மறுக்கவோ அதிகாரம் உண்டு. ஒவ்வொரு உரிமமும் குறிப்பிட்ட காலத்திற்குள் அதாவது ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளில் இருந்து மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரை உரிமம் செல்லுபடியாகும். ஆணையர் குறிப்பிட்ட காரணங்களால் உரிமங்கள் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவே காலாவதியாவதற்கு காரணங்கள் குறிப்பிட்டிருந்தால் உரிமம் தள்ளுபடி செய்யப்படும்.

3. உரிமக் கட்டணம் செலுத்தக் கடைசி நாளான மார்ச் திங்கள் 1 ஆம் நாள் விடுமுறை நாளாய் இருப்பின் அதற்கு முந்திய நாளிலே கட்டணம் செலுத்தப்பட வேண்டும். அவ்வாறு தாமதமாக செலுத்தும் உரிமக் கட்டணங்களுக்கு 100 சதவீதம் அபராத கட்டணத்துடன் சேர்த்து செலுத்தப்பட வேண்டும்.

4. உரிமம் புதுப்பிக்க 90 நாட்களுக்கு மிகாமலும் 30 நாட்களுக்கு முன்னதாகவும் உரிமக் கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பங்களின் மீது ரூ. 2 மதிப்புள்ள அரசாங்க முத்திரை வில்லை (Court-fee Stamp) ஒட்டப்பட்டு முறையான கட்டண விகிதம் செலுத்தி விண்ணப்பதாரரின் கையொப்பத்துடன் உரிய படிவத்தில் விண்ணப்பிக்கும் விண்ணப்பம் மட்டும் சரியானதாகக் கருதி ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்களை இந்நகராட்சியின் தகவல் மையத்தில் கட்டணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

5. குறிப்பிட்ட கால கெடுவிற்குள் அதாவது 30 நாட்களுக்கு முன்பே உரிமக் கட்டணம் செலுத்தி புதுப்பிக்கவோ அல்லது உரிமம் பெறவோ விண்ணப்பிக்க வேண்டும். தாமதமாக புதுப்பிக்கின்ற அல்லது புதிதாக உரிமம் கோருகின்ற விண்ணப்பங்களுக்கு அபராத தொகையாக 100 விழுக்காடு (சதவீதம்) உரிமக் கட்டணத்துடன் சேர்த்து செலுத்தப்பட வேண்டும்.

6. ஓர் இடத்தில் 1க்கு மேற்பட்ட தொழில் இனங்களுக்கான உரிமம் தேவையாக இருந்தால் அந்த தொழில் இனங்களில் அதிகமான கட்டணம் எந்த தொழில் இனத்திற்கு உள்ளதோ அந்த தொகையும் சேர்த்து செலுத்தப்பட வேண்டும். விண்ணப்பத்தில் உரிமம் தேவையுள்ள எல்லா தொழில் இனங்களையும் குறிப்பிடப்பட வேண்டும்.

7. ஓர் இடத்தில் நடத்தும் தொழில் இனத்திற்கு வழங்கப்பட்ட உரிமம் அதே தொழிலுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். வேறு ஒரு இடத்தில் உபயோகித்துக் கொள்ள மாற்றிக் கொடுக்கப்படமாட்டாது. ஓர் இடத்திற்கு விண்ணப்பித்திருந்த உரிமம் இருந்த இடத்தில் நடத்தும் தொழில் இனத்திற்கு மட்டுமே செல்லுபடியாகும்.

8. விண்ணப்பம் செய்யாமல் நடத்தப்படும் தொழில் இனங்களை பொருத்தவரை விகிதாச்சார கட்டணம் அனுமதிக்கப்பட மாட்டாது. அத்தொழில் இனங்களுக்கான கட்டணங்கள் முழுவதையும் அபராத தொகையுடன் 100 சதவீதம் சேர்த்து செலுத்தப்பட வேண்டும்.

9. விண்ணப்பத்தில் குறிப்பிட்ட கால அளவிற்கு முன்பாகவே தொழிலை நிறுத்தி விட்டால் செலுத்திய கட்டணம் திருப்பித்தர மாட்டாது.

10. உரிமம் பெறாமல் நடத்தப்படும் தொழில் இனங்களுக்கு தமிழ்நாடு பொது சுகாதார சட்டம், மாவட்ட நகராட்சிகளின் சட்டம் மற்றும் விதிகளின்படி குற்றம் எனக்கருதி நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும்.

11. உரிமை ஆணையை பிறருக்கு விற்கவோ அல்லது மாற்றவோ கூடாது.

12. பண்டிகை முதலிய விஷேச காலங்களில் நடத்தப்படும் தற்காலிகத் தொழில் இனங்களுக்கு நாட்களுக்கு முன்பே விண்ணப்பம் செய்து உரிமம் பெற்ற பின்னரே நடத்தப்பட வேண்டும்.

13. உரிமை ஆணை பெற்றுள்ளவர் தாம் செய்து கொண்டு வந்த வியாபாரத்தை நிறுத்திக் கொள் நினைத்தால் அந்த விவரத்தை 30 நாட்களுக்கு முன்னதாகவே நகராட்சிக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டு

## அட்டவணை

### குன்னூர் நகராட்சி

| வரிசை எண். | செக்ஷன் ஷெட்யூல் பிரிவு அட்டவணை | அச்ச அருவருக்கத்தக்கதும் மற்றும் உணவு கலப்பட தடுப்புச் சட்டத்தின்கீழ் நடத்தும் தொழில் இனங்களின் விவரம் | தற்போதைய கட்டணத் தொகை. | உத்தேச கட்டணத் தொகை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | (ரூபாய்) | (ரூபாய்) |
| 1 | 249(ஏ) | (1) லாண்டரி கடை | 60 | 70 |
| | | (2) டிரைகிளீனர்ஸ் | 115 | 140 |
| 2 | 249(டி) | விவசாய இடுபொருட்களின் விற்பனை மற்றும் சேமிப்புக் கிடங்கு | 290 | 340 |
| 3 | 249(டி) | (1) ஆடு, மாடு, தோல் சேமிப்பு கிடங்கு | 175 | 210 |
| | | (2) மாட்டு எலும்பு, ரத்தம் சேமிப்பு | 175 | 210 |
| | | (3) உரோமங்களை சேகரித்து பயன்படுத்துதல் | 230 | 270 |
| 4 | 249(இ) | கம்பளி போர்வைகள் வாடகைக்கு மற்றும் விற்பனைக்கு | 230 | 270 |
| 5 | 249(ஜி) | (1) சோப்பு தயாரித்தல், முலாம் பூசும் கம்பெனி, எண்ணெய் விதை உடைக்கும் மற்றும் எண்ணெய் இதர தயாரிப்புகளுக்கு சிறிய அளவில் வரவு—செலவு ரூ. 20,000—க்குள் பெரியஅளவில் ரூ. 20,000—க்கு மேல். | 345<br>690 | 400<br>800 |
| | | (2) சுண்ணாம்பு விற்பனை | 115 | 140 |
| | | (3) செங்கல், ஓடு, மணல் விற்பனை செய்ய | 460 | 530 |
| | | (4) வீடு கட்டுமான பொருட்கள் மொத்த வியாபாரம் செங்கல், ஓடு, மணல், தகரம் மற்றும் இதர கட்டுமான பொருட்கள் | 1,380 | 1,600 |
| | | (5) பழங்கள் விற்க (சில்லறை) | 60 | 70 |
| | | (6) பழங்கள் விற்க (மொத்தமாக) | 290 | 340 |
| 6 | 249(4) | (1) செயற்கை உரங்கள் தயாரிக்க | 865 | 1,000 |
| | | (2) செயற்கை உரங்கள் விற்பனை | 460 | 530 |
| 7 | 249(ஜே) | இது சம்பந்தமாக தமிழ்நாடு அரசாணை எண். 1432, 7—8—1990இல் பிரசுரித்த உரிமக் கட்டணம் தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள், மதுபான விற்பனை செய்து நடத்தப்படும் உணவு வசதி கூடிய தங்கும் விடுதிகளுக்கு தொடர்ந்து இருக்கும் | | |
| 8 | 249(கே) | குறைந்தது இரண்டுக்கும் மேற்பட்ட ஆடு, குதிரை, மாடு, பன்றி, கால்நடைகள் வளர்க்க | 115 | 140 |

| (1) | (2) | (3) | (4) (ரூபாய்) | (5) (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 9 | 249(எல்) | (1) மாவு அரைக்க, அரைத்த மாவு (இட்லி மாவு), மசால் பொடிகள் விற்பனை செய்ய— | | |
| | | (1) சில்லறை | 115 | 140 |
| | | (2) மொத்தமாக | 690 | 800 |
| | | (2) இனிப்புகள் தயாரிக்க | 230 | 270 |
| | | இனிப்புகள் விற்பனை செய்ய | 230 | 270 |
| | | (3) அடுமனையில் தயாரிக்கும் உணவு பொருட்களை சேமித்து வைக்க (பேக்கரி) அவுன் | 230 | 270 |
| | | (4) பேக்கரியுடன் டீ மற்றும் காபி சேர்த்து தயாரிக்க (விற்பனை) | 690 | 800 |
| 10 | 249(எம்) | (1) ஐஸ், ஐஸ் கிரீம், ஐஸ் புரூட்ஸ் தயாரிக்க மற்றும் விற்க | 345 | 400 |
| | | (2) ஐஸ் கிரீம் தள்ளுவண்டியில், தலையில் சுமந்து விற்பனை செய்ய | 175 | 210 |
| 11 | 249(என்) | 100 சதுரடிக்குள் விறகுகள் விற்க மற்றும் வீடு கட்டும் மரங்கள், ஓடுகள் வாங்க | | |
| | | (1) எரிக்க பயன்படும் விறகுகள் விற்க | 175 | 210 |
| | | (2) மூங்கில் தப்பைகள், குச்சிகள், நார்கள், வீடு கட்டுவதற்கு கிடங்கு (ஒவ்வொரு 100 சதுரடிக்கும் ரூ. 140 அதிகம்) | 115 | 140 |
| 12 | 249(ஓ) | (1) பலசரக்கு சாமான்கள் சில்லறை வியாபாரம் | 230 | 270 |
| | | (2) பலசரக்கு சாமான்கள் மொத்த வியாபாரம் | 460 | 540 |
| | | (3) விவசாய விளைபொருட்களின் சேமிப்பு கிடங்கு (டி5) விற்பனை (பர்டிலைசர்) உரம் விற்பனை மற்றும் இதர பூச்சி மருந்து பொருட்கள் | 290 | 340 |
| | | (4) குடோன் உணவு பொருட்கள் சேகரித்து வைக்க (கோதுமை, அரிசி, பார்லி விற்க (அ) சேர்த்து வைக்க (எலியால் கவரக்கூடிய பொருட்கள்) | 460 | 530 |
| | | (5) காய்கறிகள் | 50 | 60 |
| 13 | 249(பி) | (1) ஜாங்கிரி, சர்க்கரை, சாக்லேட், இருமல் சளி சிரப்பு, ஊறுகாய், ஜாம் மற்றும் ஹோம் மேடு சாக்லேட் தயாரிக்க | 290 | 340 |
| | | (2) எளிதில் தீ பற்றக்கூடிய கேஸ் சிலிண்டர், வெடிபொருட்கள் மற்றும் சேமிப்பு விற்பனை செய்ய | 460 | 530 |
| | | (3) (பி) வெடிபொருட்கள் (பட்டாசு விற்பனை சீசன் நேரம் மட்டும் 3 மாதம் | 290 | 340 |
| 14 | 249(க்யூ) | (1) எரிசாராயம் சேமிப்பு (பிராந்தி கடை) | 865 | 1,000 |
| | | (2) பிராந்தி கடைகளில் உள்ள சாக்னா கடை (அரசு அனுமதி பெற்ற) | 575 | 670 |
| | | (3) போட்டோ பிலிம்ஸ், வீடியோ கேசட், ஆடியோ கேசட் பாடல் பதிவகம் அனைத்திற்கும் சேமிப்பு விற்க, வாடகைக்கு விட | 115 | 140 |
| | | (4) கார்பைட் மருந்துகள், அமிலங்கள் டிஸ்டில்டு வாட்டர் சேமிக்க விற்க | 115 | 140 |
| | | (5) ரீட்ரெடிங் பழைய டயர்கள் | 345 | 400 |
| | | (6) மண்ணெண்ணை சேமிக்க, விற்க | 115 | 140 |
| | | 234 லிட்டர் வரை | 230 | 270 |
| | | 234லிருந்து 468 லிட்டர் வரை | 345 | 400 |
| | | 468 லிட்டருக்கு மேல் | 460 | 540 |

| (1) | (2) | (3) | (4) (ரூபாய்) | (5) (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 14 | 249(க்யூ) | (7) பஞ்சு வாங்க, விற்க சேமிப்பு (சில்லறை மற்றும் மொத்த வியாபாரம்) | 230 | 270 |
| | | (8) அருவருக்கத் தக்க நாற்றம் உண்டாக்கக் கூடிய பொருட்கள் தயாரிக்க, விற்க சேமிக்கும் கலவை செய்யும் இடங்கள்— | | |
| | | (1) யூகலிப்டஸ் தைலம் விற்பனைக்கு, தயாரிக்க | 230 | 270 |
| | | (2) வினீகர் தைலம் | 230 | 270 |
| | | (3) விறகு கரி | 230 | 270 |
| 15 | 249(டி) | வாழ்க்கையை பாதிக்கக் கூடிய நோயை உண்டாக்க தொழிற்சாலைகள் நடத்தும் இடங்களுக்கு தேயிலை தொழிற்சாலை, ரப்பர் பேக்டரி, கெமிக்கல் தொழிற்சாலை மற்றும் இதர தொழிற்சாலைகளுக்கு பிளாஸ்டிக் தடை விதிக்கப்பட்டது நீக்கல் ஆக்கப்பட்ட பொருட்கள் தயாரிக்க அனைத்து சிறிய பெரிய தொழிற்சாலைகள் இதில் அடங்கும். | 2,300 | 2,700 |
| 16 | 246 | திருவிழா சமயங்களில் நகராட்சிக்கு எல்லைக்கு அப்பால் கால்நடைகள் வதை செய்யும் இடங்களுக்கு | 230 | 270 |
| 17 | 255 | ஆடு, மாடு, கோழி, பன்றி இறைச்சிகள் விற்கும் இடத்திற்கு | 230 | 270 |
| 18 | 258(ஏ) | (ஏ) பால் விற்கும் (அ) சேகரிக்கும் இடங்களுக்கு பால்பூத் ஒன்றிக்கு | 575 | 670 |
| | | (பி) நகராட்சி எல்லைக்குள் பால் விற்க, வாகனங்களில் வரும் வாகனத்திற்கு ஒன்றிற்கு | | |
| | | (சி) நகராட்சி எல்லைக்குள் சுற்றித் திரிந்து பால் விற்பவர்களுக்கு | 115 | 140 |
| 19 | 269(ஏ) (பி) | மீன் விற்கும் கடைகளுக்கு | 230 | 270 |
| | | கருவாடு விற்பனை | 115 | 140 |
| | | தலையில் சுமையாக எடுத்து சென்று மீன் விற்க | 115 | 140 |
| 20 | 249 | மின் இயந்திரங்கள் மற்றும் உரிமம் புதுப்பித்தல்— | | |
| | | (1) ஒரு குதிரை வேகம் வரை 1 எச்.பி. | 60 | 70 |
| | | (2) இரண்டு குதிரை வேகம் முதல் ஐந்து குதிரை வேகம் வரை | 115 | 140 |
| | | (3) ஆறு குதிரை வேகம் முதல் 10 குதிரை வேகம் வரை | 230 | 270 |
| | | (4) 11 குதிரை வேகம் முதல் 20 குதிரை வேகம் வரை | 345 | 405 |
| | | (5) 21 குதிரை வேகம் முதல் 30 குதிரை வேகம் வரை | 460 | 540 |
| | | (6) 31 குதிரை வேகம் முதல் 40 குதிரை வேகம் வரை | 575 | 670 |
| | | (7) 41 குதிரை வேகம் முதல் 50 குதிரை வேகம் வரை | 690 | 800 |
| | | (8) 51 குதிரை வேகம் முதல் 60 குதிரை வேகம் வரை | 865 | 1,000 |
| | | (9) 61 குதிரை வேகம் முதல் 70 குதிரை வேகம் வரை | 920 | 1,060 |

| (1) | (2) | (3) | (4) (ரூபாய்) | (5) (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 20 | 249 | (10) 71 குதிரை வேகம் முதல் 100 குதிரை வேகம் வரை | 1,150 | 1,330 |
| | | (11) 101 குதிரை வேகம் முதல் 150 குதிரை வேகம் வரை | 1,225 | 1,410 |
| | | (12) 151 குதிரை வேகம் முதல் 200 குதிரை வேகம் வரை | 2,300 | 2,645 |
| | | (200 குதிரை வேகம் முதல் கூடுதல் ஒரு குதிரை திறனுக்கு செலுத்தப்பட வேண்டும்). | 115 | 140 |
| 21 | 249 | டிரான்ஸ்பார்மர் அனைத்து வியாபார சங்கங்களிலும் பயன்படுத்தப்படும் இடங்களுக்கு— | | |
| | | (1) 5 கே.வி.ஏ. | 230 | 270 |
| | | (2) 6—10 கே.வி.ஏ. வரை | 460 | 540 |
| | | (3) 11—30 கே.வி.ஏ. வரை | 690 | 800 |
| | | (4) 31—50 கே.வி.ஏக்கு மேல் (கூடுதலாக ஒவ்வொரு கே.வி.ஏக்கு ரூ. 100 வீதம் கட்ட வேண்டும்) | 920 | 1,060 |
| 22 | 249 | காப்பி கொட்டை அரைக்கும் இயந்திரம் | 230 | 270 |
| 23 | 249 | மாவுமில், அரிசி இதர மில்களுக்கு | 230 | 270 |
| 24 | 249 | ஜின்னிங், சாக்கு பைகளில் பிரிண்டிங் செய்ய மற்றும் பிரிண்டிங் பிரஸ்களுக்கு | 230 | 270 |
| 25 | 249 | ஸ்டேசனரி கடைகளுக்கு | 230 | 270 |
| 26 | 249 | பிளாஸ்டிக் பொருட்கள் விற்க (தடை செய்யப்பட்ட பொருட்கள் நீங்கலாக) | 230 | 270 |
| 27 | 249 | தயிர், வெண்ணை, மொத்த விற்பனை | 230 | 270 |
| 28 | 249 | தயிர், வெண்ணை, சில்லறை விற்பனை | 115 | 140 |
| 29 | 249 | (1) டீத்தூள் விற்பனை செய்ய (சில்லறை விற்பனை மட்டும்) | 230 | 270 |
| | | (2) டீத்தூள் சேகரம் செய்யும் குடோனுக்கு ஒவ்வொரு குடோனுக்கும் தனித்தனியாக செலுத்த வேண்டும் | 690 | 800 |
| | | (3) டீத்தூள் உபாசியில் ஏலத்தில் கலந்து கொண்டு எடுப்பவர்களுக்கு | 575 | 670 |
| | | (4) டீத்தூள் (ஏற்றுமதி உரிமம்) வெளியிடங்களுக்கு ஏற்றுமதி செய்ய உரிமம் பெற மற்றும் டீத்தூள் மொத்த விற்பனைக்கு | 1,225 | 1,410 |
| | | (5) டீத்தூள் மொத்த விற்பனை, டீத்தூள் கமிஷன் ஏஜெண்ட், டீ புரோக்கர்ஸ் | 920 | 1,060 |
| | | (6) ரூ. 4,00,000 வரை ஆண்டு வரவு, செலவு செய்யும் புரோக்கர் டீ வியாபாரிகளுக்கு | 1,380 | 1,600 |
| | | (7) ரூ. 4,00,000 க்கு மேல் வியாபாரம் செய்யும் ஆண்டு வரவு செலவு டீ புரோக்கர் வியாபாரிகளுக்கு | 2,300 | 2,700 |
| 30 | 249 | எண்ணை சமையலுக்கு மொத்த விற்பனை உரிமம் | 290 | 340 |

| (1) | (2) | (3) | (4) (ரூபாய்) | (5) (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 31 | 249(ஜ) | பெட்ரோல், டீசல், கிரீஸ் சேமித்து வைத்து விற்பனை செய்ய | 575 | 670 |
| 32 | 249(ஜ) | வாகனங்களின் சர்வீஸ் செய்வதற்கு சர்வீஸ் ஸ்டேசன் | 2,300 | 2,700 |
| 33 | 249(ஜெ) | தீப்பெட்டி மொத்த விற்பனை | 230 | 270 |
| 34 | 249(ஜெ) | திரை அரங்குகளின் உரிமம் | 230 | 270 |
| 35 | 249 | உணவு விடுதி (டீக்கடை)— | | |
| | | (1) ஏ.ஆர்வி 180 முதல் 299 வரை | 230 | 270 |
| | | (2) ஏ.ஆர்வி 300 முதல் 599 வரை | 290 | 340 |
| | | (3) ஏ.ஆர்வி 600 முதல் 999 வரை | 345 | 400 |
| | | (4) ஏ.ஆர்வி 1000 முதல் 1499 வரை | 575 | 670 |
| | | (5) ஏ.ஆர்வி 1500 முதல் 1999 வரை | 690 | 800 |
| | | (6) ஏ.ஆர்வி 2000 முதல் 2999 வரை | 805 | 920 |
| | | (7) ஏ.ஆர்வி 3000 முதல் 3999 வரை | 815 | 925 |
| | | (8) ஏ.ஆர்வி 4000 முதல் 4999 வரை | 980 | 1,130 |
| | | (9) ஏ.ஆர்வி 5000 முதல் 6999 வரை | 1,035 | 1,190 |
| | | (10) ஏ.ஆர்வி 7000 முதல் 9999 வரை | 1,150 | 1,330 |
| | | (11) ஏ.ஆர்வி 10000 முதல் 499999 வரை | 1,725 | 1,980 |
| | | (12) ஏ.ஆர்வி 50000 முதல் 99999 வரை | 2,300 | 2,700 |
| | | (13) ஏ.ஆர்வி 100000க்கு மேல் | 2,375 | 2,710 |
| 36 | 249(டபிள்யு) | மருந்து கடைகள் | 265 | 310 |
| 37 | 249 | பெட்டிக்கடைகள் (பீடி, சிகரெட், பிஸ்கட்ஸ் சில்லறை விற்பனை) | 115 | 140 |
| 38 | 249 | பிஸ்கட், சாக்லெட் மற்றும் போர்ன்விட்டா மற்ற உணவு பொருட்கள் விற்கும் இடம் மொத்த விற்பனை | 575 | 670 |
| 39 | 249 | சோடா கலர் தயாரிக்க, கண்ணாடி கடைகள் | 230 | 270 |
| 40 | 249 | பியூட்டி பார்லர் | 230 | 270 |
| 41 | 249 | மர சாமான்கள் தயாரித்தல் மற்றும் விற்பனை கார்பெண்டரிங் | 230 | 270 |
| 42 | 249 | பழைய வீட்டு சாமான்கள் கதவு, ஜன்னல் இதர பொருட்கள் விற்பனை | 230 | 270 |
| 43 | | துணி கடைகள் | 175 | 210 |
| 44 | | காலணி பொருட்கள் விற்க | 175 | 210 |
| 45 | | நகை கடைகள் | 230 | 270 |
| 46 | | பழைய இரும்பு சாமான்கள் விற்பனை சேகரம் செய்யும் கடைகள் உரிமம் | 175 | 210 |
| | | (1) புதிய இரும்பு சாமான்கள் மற்றும் ஹார்டுவேர் கடைகள் | 175 | 210 |
| 47 | | பாத்திரக் கடைகள் உரிமம் பெற (எவர்சில்வர், பித்தளை, அலுமினியம்) | 175 | 210 |

| (1) | (2) | (3) | (4) (ரூபாய்) | (5) (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 48 | | எலக்ட்ரிக்கல் சாமான்கள் விற்பனை | 175 | 210 |
| 49 | | பர்னிச்சர் கடைகளின் பர்னிச்சர் செய்ய மற்றும் விற்க | 175 | 210 |
| 50 | | டி.வி., பிரிட்ஜ், வாஷிங் மிசின், கிரைண்டர், மிக்ஸ் டேப் வானொலி இதர சாமான்கள் சேமித்து வைக்க | 175 | 210 |
| | | சணல் பை, டீத்தூள் பேக்கிங் பை தயாரிக்கும் இடம் | 575 | 670 |
| 51 | | ஆட்டோமொபைல்ஸ் உதிரி பாகங்கள் விற்க ஆட்டோமொபைல் ஒர்க்ஷாப் இரண்டு சக்கர வாகனம் 4 சக்கர வாகனம் மற்றும் வெல்டிங் லேத் ஒர்க்ஸ் இதர வகைகள். | 290 | 340 |
| 52 | | பூக்கடைகள் (பூ விற்பனை உரிமம் பெற) | 175 | 210 |
| 53 | | சேர், சாமியானா, இதர சமையல் சாமான்கள் வாடகை விடும் கடை உரிமம் | 230 | 270 |
| | | கண்ணாடி கடைகள் | 175 | 210 |
| 54 | | சாக்குமண்டி வியாபாரம் | 175 | 210 |
| 55 | | பத்தி, கற்பூரம், சாம்பிராணி இதர பொருட்கள் விற்பனை | 115 | 140 |
| 56 | | சிமெண்ட் மொத்த விற்பனை | 290 | 340 |
| | | சிமெண்ட் குடோன் | 575 | 670 |
| | | சிமெண்ட் சில்லறை விற்பனைக்கு | 230 | 270 |
| 57 | | உணவு பொருட்கள் வெளியூர்களில் இருந்து வேன், லாரிகளில் மொத்தமாக விற்பனை செய்ய (பால்) பலகார வகை, மைதா, மசாலா பொடிகள், பலசரக்கு வகைகள், கோழி, பேக்கரி, காப்பித்தூள் இனங்கள் மற்றும் இதர பொருட்கள். | 575 | 670 |
| 58 | | முடி திருத்தும் கடை | 100 | 120 |
| 59 | | ஜெராக்ஸ் கடைகள் (Xerox) | 100 | 120 |

மேலே குறிப்பிட்ட உரிமக் கட்டணங்களை நடப்பு உரிம காலம் முடிவடையும் 30 நாட்களுக்கு முன்பாக செலுத்த வேண்டும். தாமதமாக புதுப்பிக்கின்ற விண்ணப்பங்களுக்கு அபராதத் தொகையாக 100 விழுக்காடு உரிமக் கட்டணத்துடன் சேர்த்து கட்ட வேண்டும். புதிதாக தொடங்கும் தொழில் இனங்களுக்கு 30 தினங்களுக்கு முன்பாக உரிமக் கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும். உரிமம் இல்லாமல் நடத்தும் தொழில் இனங்களுக்கு நகராட்சி சட்டப் பிரிவு மற்றும் துணை விதிகளின்படி நீதிமன்றத்தில் குற்ற வழக்கு தொடரப்படும்.

குன்னூர்,
19—11—2007.

(ஒ.இ.) X X X,
நகராட்சி ஆணையர்.

தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரால் சேலம் அரசினர் கிளை அச்சகத்தில்
அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.